**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு. ம.சி. கண்ணதாசன் எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10-ம் நாள் செவ்வாய்கிழமை
I.A.02/24 in O.S.84/2017

திருமுருகன் ... மனுதாரர்/வாதி

//எதிர்//

1. கோவிந்தராஜ்,
2. இலட்சமிகாந்தன்,
3. மகேந்திரன்,
4. குண்டுபாலு (எ) பாலு,
5. சார்பதிவாளர், தா.பழூர். .. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இறுதியாக 23.01.2026-அன்று விசாரணைக்கு வந்ததில் மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.L.ராஜேஷ் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்கு உரிய அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜராகாத காரணத்தினால் தோன்றாத் தரப்பினராகளாகப்பட்டும், 5 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 5 ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், 6 ம் எதிர்மனுதாரர் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், மனு, பிரமாண வாக்குமூலம் மற்றும் எதிருரை ஆகியவற்றை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## உத்தரவு

1. இம்மனுவானது கடந்த 27.11.2023 அன்று தள்ளுபடியான தாவாவை Restore மனு தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமதமான 357 நாட்களை மன்னித்து வழக்கை மேல் நடத்த அனுமதிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர்களின் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம்:-**

2. இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி வழக்கு தொடர்ந்து கடந்த 27.11.2023 அன்று மேற்படி வழக்கு சிறப்புப்பட்டியலில் போடப்பட்டிருந்தது என்றும், மனுதாரருக்கு அவருடைய முன்னாள் வழக்கறிஞர் வழக்கு விவரம் பற்றி எதுவும் கூறவில்லை என்றும், மனுதாரரால் அவரது வேலை நிமித்தம் காரணமாக அந்த சமயத்தில் அவரது வழக்கறிஞரை தொடர்புகொள்ள இயலவில்லை என்றும், மனுதாரர் வழக்கு விபரம் பற்றி தனது வழக்கறிஞரை சந்தித்து வழக்கு விவரம் கேட்டபோது கடந்த 27.11.2023ம் தேதியில் மனுதாரரும், தனது வழக்கறிஞரும் ஆஜராகாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், இது வேண்டுமென்றோ அல்லது அலட்சியத்தினாலோ ஏற்பட்டது அல்ல என்றும், இம்மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்றும், ஆகையால் கடந்த 27.11.2023 அன்று தள்ளுபடியான தாவாவை Restore செய்ய மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 357 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொள்ள உத்தரவாக வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>6ம் எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம் :–</u>**

3. மனுதாரரின் மனு சரியல்ல என்றும், உண்மைக்கு புறம்பானது என்றும், மனுவில் கடந்த 27.11.2023ம் தேதியன்று சமூகம் நீதிமன்றம் நீதியின் நலன் கருதி மனுவினை மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், மனுதாரர் மனுவில் கூறியுள்ளது போல் மனுதாரர் தனது வேலை நிமித்தம் காரணமாகவும், வழக்கறிஞரை சந்திக்க இயலாத காரணத்தினாலும் வழக்கு விவரம் பற்றி வழக்கறிஞர் மனுதாரரிடம் கூறாமல் போனதாலும் வழக்கு தள்ளுபடி ஆகி விட்டது என்பது ஏற்ககூடியதல்ல என்றும், அது சம்மந்தமாக சமூகம் நீதிமன்றத்தில் எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும், எதிர்மனுதாரரை அலைக்கழிக்க வேண்டும்

என்றும், எதிர்மனுதாரருக்கு மன உளைச்சலை ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வழக்கை நீட்டிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், ஆகையால் மனுதாரரின் இந்த மனுவை 6ம் எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**<u>பிரச்சனைக்குரிய தீர்வு.</u>**

6. மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் மனு சங்கதிகளை குறிப்பிட்டு இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் எதிருரை சங்கதிகளை குறிப்பிட்டு இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டனர்.

7. மனு, எதிருரை மற்றும் இருதரப்பு வாதங்கள் ஆகியனவற்றை பரிசீலனை செய்து பார்க்கையில் அசல் வழக்கில் கடந்த 27.09.2023 அன்று எழுவினாக்கள் வனையப்பட்டு 11.10.2023 அன்று விசாரணைக்கு மாற்றப்பட்டு பின்னிட்டு விசாரணைப்பட்டியலுக்கு 15.11.2023 அன்று மாற்றப்பட்டுள்ளது. பின்னிட்டு 27.11.2023 அன்று வாய்தா மாற்றப்பட்டு, மேற்படி தேதியில் வாதி தரப்பில் விசாரணைக்கு ஆஜராகததால் வாதியின் தவறுகைக்காக மேற்படி வழக்கானது கடந்த 27.11.2023 அன்று தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்துள்ளது. தற்போது மனுதாரர் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள தள்ளுபடியான தாவாவை ரத்து செய்ய காலதாமதமாகியுள்ளதை மன்னித்து restore மனுவை கோப்பிற்கு

எடுப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு பெருத்த பாதிப்பு ஏதும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

8. எனவே முடிவாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

M S KANNADHASAN — Digitally signed by M S KANNADHASAN

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:
இல்லை.

M S KANNADHASAN — Digitally signed by M S KANNADHASAN

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.